பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

சுடர்: 5 பிரமோதூத ஸு ஆடி மீ 24 உ. வியாழக்கிழமை (09-08-1990) ஹிஜ்ரி 1410 முஹர்ரம் பிறை 17 கதிர்: 159

# சுன்னாகம் மின் நிலையம் மீதும் பொம்மர் குண்டு வீச்சு!

## இனி இயங்க முடியாது நாசம்!! டீஸல் தாங்கிகள் பற்றி எரிந்தன!!!

யாழ்ப்பாணம், ஆகஸ்ட். 9

சுன்னாகம் மின்நிலையத்தின் மீது ஸ்ரீலங்கா விமானப்படையின் பொம்மர்கள் நேற்று நண்பகலும் மாலையில் இருதடவைகளும் குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்தின.

இதனால் மின்நிலையம் இனி இயங்கமுடியாத அளவுக்கு சேதமுற்றது. பாரிய மூன்று டீஸல் தாங்கிகளும், மின்சாரத்தை உற்பத்தி செய்யும் ஜெனரேட்டர்களும், மின்சாரக் கட்டுப்பாட்டு அறையும் தீப்பிடித்து எரிந்து நாசமாகின.

முதலில் நண்பகல் 12 மணிக்கு இரண்டு பொம்மர்கள் மாறிமாறி சுமார் ஒன்பது குண்டுகளை மின் நிலையத்தின் மீது வீசின.

இதனால் ஜெனரேட்டர்களை இயக்குவதற்கு தேவையான ஹெவி டீஸலைக் கொண்டிருந்த மூன்று தாங்கிகளுள் ஒன்று தீப்பிடித்தது.

மின் விநியோக கட்டுப்பாட்டு அறையும் சேதமுற்றது.

டீஸல் தாங்கி பெரும்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ் ரயில் நிலைய சந்தியில் பொம்மர் குண்டுக்கு 8 பேர் பலி!

யாழ்ப்பாணம், ஆக. 9

நேற்றுக்காலை சுமார் 8-45 மணியளவில் யாழ் நகரத்துக்குமேல் திடீரென வந்து சேர்ந்த- 4 இயந்திரங்களைக் கொண்ட - சீனத் தயாரிப்பு விமானம் வீசிய பாரிய குண்டுகளினால் யாழ்ரயில் நிலையச் சந்தியில் எட்டுப்பேர் பலியாகினர். மேலும் சிலர் படுகாயமுற்றனர்.

உயிரிழந்தோரில் சிலரின் உடல்கள் சின்னாபின்னமாகிக் கிடந்தன.

மிக உயரத்தில் முகில் கூட்டத்துக்குமேல் பறந்துவந்த விமானம் யாரும் எதிர்பாராத வேளையில், திடீரெனக் குண்டுகளை வீசியதால் குண்டுவீச்சுக்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வாய்ப்பின்றியே இந்த எட்டுப்பேரும் பலியாகினர்.

ரயில் நிலையத்துக்கு முன்னால் உள்ள யாழ் ஆஸ்பத்திரிவீதி - மாட்டின்வீதிச் சந்தியிலேயே இந்த முதல்குண்டு விழுந்தது.

சந்தியில் உள்ள மரக்காலை

(3ஆம் பக்சம் பார்க்க)

### அகதி முகாமாகவிருந்த

## சென். பற்றிக்ஸ் கல்லூரி மீதும் விமானத் தாக்கு! சிறுமி பலி!!

யாழ்: சென்பற்றிக்ஸ் கல்லூரிமைதானத்தில் நேற்றுக் காலை பொம்மர்கள் வீசிய குண்டினால் கல்லூரி அகதி முகாமில் இருந்த பத்து வயதுச் சிறுமி ஒருத்தி பலியானாள் இருபதிற்கும் அதிகமானோர் காயமுற்றனர்.

இந்தச் சம்பவத்தில் மேலும் இருவர் உயிரிழந்ததாகத்தெரிவிக்கப்பட்டது. ஆனால் அதனை ஊர்ஜிதம் செய்யமுடியவில்லை.

பொம்மர்குண்டுக்கு இலக்காகி சுதர்சினிஎன்ற சிறுமியே பலியானாள்.

இந்தக் குண்டுவீச்சுச் சம்பவத்தை அடுத்து சென்பற்றிக்ஸ் கல்லூரி அகதிமுகாமில் தங்கியிருந்தோர் அங்கிருந்து வெளியேறினர். [உ-3]

## கல்மடு அகதி முகாம் மீதும் குண்டு வீச்சு! மூவர் மரணம்!!

வவுனியாப் பகுதியில் கல்மடுவில் உள்ள அகதிமுகாம் மீது நேற்றுமுன்தினம் (செவ்வாய்) விமானம் குண்டுவீச்சு நடத்தியது. அப்போது முகாமில் தங்கியிருந்த அகதிகள் மூவர் அந்த இடத்திலேயே பலியானார்கள். இன்னும் எட்டுப்பேர் காயமடைந்தனர்.

கல்மடுவில் உள்ள சர்வோதய சிறுவர் பாடசாலை முகாமே தாக்குதலுக்கு இலக்கானது,

வவுனியா தேவகுளத்தைச் சேர்ந்தவர்கள் மன்னார் சென்று - அங்கிருந்து இந்தியா செல்வதற்காக இந்த முகாமில் தங்கியிருந்ததாகத் தெரியவருகிறது.

இதேவேளை தவசிகுளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் அமைந்துள்ள அகதிமுகாம்மீதும் அதேதினம் விமானம் குண்டுவீசித் தாக்கியது.

குண்டு சிறிது தொலைவில் வீழ்ந்து வெடித்ததால் எவரும் பாதிக்கப்படவில்லை. [ஓ-76]

## கிழக்குப் பகுதியில் 57 சிங்களவர் கொலை

கொழும்பு, ஆக. 9

அம்பாறை மாவட்டத்தில் நேற்று முன்தினம் 30 சிங்களவரும், அனுராதபுரம் மாவட்டத்தில்நேற்றுக்காலை 27 சிங்கள பயணிகளும் இனந்தெரியாதோரால் கொலைசெய்யப்பட்டிருக்கின்றனர்.

முதற்சம்பவத்தில் அம்பாறையில் ரண்தவெவ கிராமத்தைச் சேர்ந்த 30 பேர் சுட்டும் வெட்டியும்கொலைசெய்யப்பட்டனர்.

மற்றைய சம்பவத்தில் திருகோணமலையிலிருந்து அனுராதபுரத்துக்கு பஸ்ஸில் சென்ற பயணிகள் வழிமறிக்கப்பட்டு சுட்டுக் கொலை

( ஆம் பக்கம் பார்க்க)

## ● வந்தும் வராத மின்சாரம்

மின்சாரத்தைப் பொறுத்தவரை யாழ்ப்பாணமக்களுக்கு கைக்கெட்டியும்வாய்க்கு எட்டாத நிலைதான்.

கிளிநொச்சியில் மின்கேபிள்கள் அறுந்திருந்ததால் இதுவரை குடாநாட்டிற்கான மின்விநியோகம் தடைப்பட்டிருந்தது.

ஆனால் நேற்றுகிளிநொச்சியில் திருத்த வேலைகள் முடிவுற்று நேற்றுமாலை சுன்னாகம் மின்நிலையத்துக்கு நீர் மின்விநியோகம் கிடைக்கும் சூழ்நிலை இருந்தது.

எனினும் சுன்னாகம் மின் நிலையம் எரிந்து நாசமாகியிருப்பதால் இனிமேல் - இப்போதைக்கு குடாநாட்டுமக்களுக்கு மின்சாரம் கிடைக்கும் வாய்ப்பே இல்லாமற்போய் விட்டது. [உ-9-75]

## சங்கானை ஆஸ்பத்திரி நோக்கி பொம்மர் தாக்கு!

யாழ்ப்பாணம், ஆக. 9

சங்கானை சந்தைக்கு அருகேயிருக்கும் தனியார் வைத்தியசாலை ஒன்றை நோக்கி நேற்றுக்காலை 10.15 மணிக்கு பொம்மர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

ஆனால் வைத்தியசாலை சேதம் ஏதுமின்றித் தப்பியது. (ஒ-3)

## ரயில் நிலைய சந்தியில் உயிரிழந்த எண்மர்

யாழ்ப்பாணம், ஆக. 9

நேற்றுக்காலை யாழ் - ரயில் நிலைய சந்தியில் விழுந்த விமானக் குண்டுக்கு பலியானவர்கள் விவரம்:- 1. எஸ். தயாளன் (உதயன் பணிமனை ஊழியர்), 2. சிவராஜா(சென். ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர்), 3. ரகுமான் (சாவகச்சேரி), 4. அன்ரன் எதிர்வீரசிங்கி (ஆசிரியர், சுதுமலை), 5. ஞானமுத்து உதயகுமார்(29 வயது-யாழ்ப்பாணம்), 6. அருமைநாயகம் எட்வேர்ட் பிரசன்னா (11 வயது- மின்சாரநிலையவீதி). 7. செல்வநாயகம், 8. மரக்காலையில் வேலை செய்த மற்றொரு இளைஞர். (உ-3-5)

## அகால மரணமானார்

உதயன் நிறுவனத்தில், அச்சகப் பகுதியில் பணிபுரிந்த எஸ். தயாளன் நேற்று அகால மரணமானார் என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

நேற்றுக் காலை ரயில்

(3ஆம் பக்கம் பார்க்க)

## வளைகுடாவை நோக்கி 50 அமெ. யுத்தக் கப்பல்கள்

வாஷிங்டன், ஆகஸ்ட் 9

வளைகுடாவிற்கு அமெரிக்காவின் 50 யுத்தக் கப்பல்களும் பெரிய விமானந் தாங்கிக் கப்பலான ஐசன்ஹோவரும் சென்றுகொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இதேவேளை சவூதி அரேபியாவின் கிழக்குப் பகுதியில் அமெரிக்க போர் விமானங்கள் தரை இறங்கியதாகத் தெரிவிக்கப் பட்டது. (ஒ-எ)

(முன்னர் வந்த செய்தி 2 ஆம் பக்கத்தில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக் தாக்குதலை முறியடிக்க சவூதிக்கு அமெரிக்கப் படைகள்

வாஷிங்டன், ஆக. 9 ஈராக்கின் தாக்குதலில் இருந்து சவூதி அரேபியாவை பாதுகாக்க அமெரிக்கா தனது படைகளை அனுப்பி வைத்திருக்கிறது.

இதற்கான உத்தரவை அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் விடுத்திருக்கிறார் என்று வாஷிங்டனில் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

சவூதி அரேபியாவில் அமெரிக்க யுத்த விமானங்களும் நிலை கொண்டுள்ளன.

(இ-எ)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

கனகரத்தினம் சிவானந்தராசாவின் அடையாள அட்டையும் லைசென்சும் முத்திரைச்சந்தையில் தவறி விட்டது. கிடைத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கலாம். (13625)

### Typewriters

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும் மற்றும் தமிழ் ஆங்கிலம் ரைப்பிங் செய்துகொடுக்கவும் Fudo Enterprises (Shiva Studio Upstair) Jaffna Road, Manipay. (சி-5289)

### கிளீன் கட்

யாழ். மின்சார நிலைய வீதியில் இயங்கிவந்த கிளீன் கட் ஸ்தாபனம், பிறவுண் வீதியில் 37, சிவகுருநாதன் வீதி (நீராவியடி பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில்) தற்போது இயங்கி வருகிறது. (C/5291)

## ஹெலி வந்தபொழுது சீனி மூடையும் பறிபோனது!

கடந்த ஞாயிற்றுக்கிழமை சங்கானையில் ஹெலி ஒன்று ரொக்கட்தாக்குதலை நடத்தி அப் பகுதியை அல்லோலகல்லோலப்படுத்தியது.

சங்கானைச் சந்தையில் நின்றவர்களும் அங்கு வியாபாரம் செய்தவர்கள் அனைவரும் கலவரப்பட்டனர். சிலர் பதுங்கு குழிகளுக்குள் ஒடி ஒளித்துக்கொண்டனர்.

சந்தையில் சீனி வியாபாரம் செய்துகொண்டிருந்த ஒருவரும் பதுங்கு குழியில் ஒளிந்திருந்துவிட்டு, ஹெலி சென்றதும் வெளியே வந்தார். பாவம்!

தாம் சந்தையில் வியாபாரம் செய்த இடத்திற்குச்சென்றார். அங்கே அவரது சீனி மூடை இருக்கவில்லை! அது மாயமாகமறைந்து போய்விட்டது!!

விடயம் தெரிந்த பலர் அவருக்கு அனுதாபம் தெரிவித்துச் சென்றனர். (ஒ-161)

## திருமலையில் ஹர்த்தால்

கொழும்பு, ஆகஸ்ட். 9 காத்தான்குடிபடுகொலைச் சம்பவத்தைக் கண்டித்து, திருகோணமலை மாவட்ட முஸ்லிம்கள் நேற்று ஹர்த்தால் அனுஷ்டித்தனர்.

(இ-எ)

## காத்தான்குடி படுகொலைக்கு கண்டனம்

கொழும்பு, ஆக. 9 காத்தான்குடி படுகொலைச் சம்பவத்தை கண்டித்துதமிழர் விடுதலைக் கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்ரீலங்கா மக்கள்கட்சி, ஈ. பி. ஆர். எல். எவ்., ஈ. என். டி. எல். எவ்., ரெலோ ஆகிய கட்சிகள்கூட்டாகநேற்றுமுன்தினம் கொழும்பில் அறிக்கைஒன்றை வெளியிட்டன.

ஜனநாயக சக்திகளைப் பாதுகாக்க இலங்கை அரசு தவறிவிட்டது என்று அந்த அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

[இ-எ]

## அண்ணனைத் தேடும் தம்பி; தாயும் தந்தையும் பலி!

கொடிகாமம், ஆக. 9 வவுனியாவில் இராணுவத்தினர் சுட்டுக் கொலை செய்ததால் தாய், தந்தையரை இழந்த பதினொரு வயதுச் சிறுவன் ஒருவன் தனது சகோதரனைத் தேடுகிறார்.

வவுனியா பூந்தோட்டத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிவராசா என்ற அந்தச் சிறுவன் இப்போது கொடிகாமம் கச்சாய் வீதியில் உள்ள திரு. சி. தருமலிங்கம் ஜேபியின் வீட்டில் இருக்கிறார்.

இந்தச் சிறுவன் கோப்பாய் சந்தியில் அனாதரவாக நின்று, போகுமிடம் தெரியாமல் தவித்த போது கொடிகாமம் வாசி ஒருவர் இங்கு அழைத்து வந்தார்.

வவுனியாவில் நடந்த இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து இச்சிறுவனும் தாயும், தந்தையும், அண்ணனுமாக இடம் பெயர்ந்து சென்றனர். சில நாட்களின் பின்னர் நிலைமை சீரானதாக அறிந்து தாயும் தகப்பனும், சகோதரனும் வீட்டைப் பார்க்கச் சென்றனர்.

அவ்வேளை தாயையும், தகப்பனையும் இராணுவத்தினர் சுட்டுக் கொன்றுவிட்டனர். சகோதரன் சமயோகிதமாக இராணுவத்தினரிடமிருந்து தப்பிக் கொண்டார்.

பின்னர் அண்ணனும் தம்பியுமாக யாழ்ப்பாணம் வந்தனர். நல்லூர் கோவிலடியில் பஸ் நிலையம் இயங்கிய போது அவர்கள் இங்கு வந்து சேர்ந்தனர். அவ்வேளை தம்பி அண்ணனைத் தவற விட்டுவிட்டார். கோப்பாய் வரை நடந்து சென்றார். அங்கு தான் அவரை கொடிகாம வாசி கண்டு அழைத்து வந்தார்.

இந்த விவரங்களை சிறுவன் சிவராசாவே உதயனுக்குத் தெரிவித்தார். (அ-75)

## காணவில்லை

முல்லைத்தீவு பொலிஸ் பகுதியில் உதவிப் பொலிஸ் சுப்பிறின்டானாக கடமையிலிருந்த திரு. இராமலிங்கம் கோபாலகிருஸ்ணன் என்பவர் 15-6-1990 இல் இருந்து காணாமல் போய்விட்டார். அவரின் தகவல் தெரிந்தவர்கள் தயவு செய்து திரு. சி. சி. கா. காங்கேசன், 'கோகுலம்' கொடிகாமம். அவர்களுடன் தொடர்பு கொள்ளவும். (C/5157)

## 31 ஆம் நாள் இதய அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

### 2ஆம் லெப்டினன்ட் பிரியங்கா செல்வி குமுதினி விஸ்வநாதபிள்ளை

அன்னையின் மடியில்: 1965 - 01 - 25
ஆண்டவன் அடியில்: 1990 - 07 - 11

அன்பின் ஒளியது உன் நியவாழ்க்கை
எங்கள் நெஞ்சம் வேகுதம்மா உன் நினைவாலே
பெருகிறது என் பாசங்கள் உமைப்பிரிந்த நாளினிலே
உருகிறது எந்நெஞ்சம் - நாட்டின் விடுதலைவேண்டி
என்ற எம் செல்வமே!

ஏற்றிவைத்த எம்குடும்ப தீபமல்லவா
ஏறிவிட்ட ஏணியதில் சாய்ந்ததேனம்மா
பண்பது தனைவிளக்கி இனைமுதூட்டினாய்
பாசமது ஏதென்று எய்துவிட்டானே - பகைவனவன்
உமைப்பிரிந்த நான்முதலாய்த் தவிக்கின்றோம்-
ஒளியின்றி

கலைகளில் நீ பெற்றது - பலகலை
அழகதில் நீ மிளிர் வர்ணமம்மா
வாழ்வதில் துறவியானாயோ -ஆனாலும்
மாழ்வதில் நீ- வீரவேங்கையம்மா
என்றென்றும் மீளாத்துயரில் ஆழ்ந்துவிட்டோம்
எம் இனியவளே!

பெற்றவரோ துடிதுடிக்க. உற்ற சோதரரோ பரிதவிக்க உறவினரோ உன் புகழ் சொல்லியழ செலுத்துகின்றோம் எம் இதயவஞ்சலியை.

நாளை அன்னாரின் அந்தியேட்டி கிரியைகளில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
பெற்றோர், சகோதரங்கள், அத்தான்மார்.

நெடியகாடு,
வல்வெட்டித்துறை. [14000]

## சுகாதார சேவைகள் புற்று நோயாளருக்கு அறிவித்தல்

வைத்திய கலாநிதி திருமதி க. உக்கிரபெருவழுதிப்பிள்ளை அவர்கள் தற்காலிகமாக யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றுகிறார். புற்றுநோயாளர்கள் வைத்திய ஆலோசனை தேவைப்படுமாயின் மேற்படி வைத்திய கலாநிதியை மானிப்பாயில் தற்காலிகமாக இயங்கும் யாழ். போதனா வைத்தியசாலையில் சந்தித்து ஆலோசனை பெற்றுக் கொள்ளலாம்.

ந. கனகசபை
யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்.

[சி-5158]

## பளையில் பல் வைத்திய பிரிவு

கிளிநொச்சிச் சுகாதாரப் பகுதியின் பல்வைத்தியப் பிரிவு தற்போது பாதுகாப்புக் கருதி தற்காலிகமாகப் பளையில் இயங்கி வருகிறது.

அதனால் சகல வெளிக்கள ஊழியர்களையும் பளைப் பணிமனைக்கு சமுகமளிக்குமாறு கிளிநொச்சி பல்வைத்திய அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ-30)

## அரச அதிபர் செயலகம் மாற்றம்

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் செயலகம் உதவி அரசாங்க அதிபர் விடுதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

விமானத்தாக்குதலினால் அரசாங்க அதிபர் செயலகம் சேதமடைந்ததை அடுத்தே இம் மாற்றம் செய்யப்பட்டதாக அரசாங்க அதிபர் பொன்னம்பலம் தெரிவித்தார். (இ-10)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### உயர்திரு V. K. வீரவாவு

(இளைப்பாறிய நீர்ப்பாசன மேற்பார்வையாளர், கலட்டிப் பிள்ளையார் கோவில் தர்மகர்த்தா)

தோற்றம்: 04 - 03 - 1906
மறைவு: 10 - 07 - 1990

அன்புடனும், பாசத்துடனும் எம்முடன் வாழ்ந்து எம்மைப் பக்குவமாக வளர்த்து வளமுடன் வாழ வழிவகுத்த அன்புத் தெய்வமே! தங்கள் ஆத்மா சாந்தியடைய கலட்டிப் பிள்ளையாரின் அருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

மகள், மருமக்கள், பெறாமக்கள்,
உடன்பிறந்தோர், மைத்துனர், மைத்துனி,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

ஜெயந்தி வாசா,
இமையாணன், உடுப்பிட்டி. (13626)

## ஓராண்டு நினைவஞ்சலி



### திரு. செல்லையா சொர்ணலிங்கம்

(ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகஸ்தர்)

மலர்வு:- 22 - 11 - 1933
உதிர்வு:- 09 - 08 - 1989

எங்கள் இதயக் கோவிலே அப்பாவே!
எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து
எமக்கெல்லாம் நல்வழி காட்டிய அன்புத் தந்தையே!
இன்றுடன் உங்களைப் பிரிந்து ஓராண்டு ஆகுதப்பா
உங்கள் நினைவுகள் எங்களைவிட்டு அகலாதப்பா
இவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர், நண்பர்கள்.

1 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு. (சி-5155)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலிகள் குற்றம் சுமத்தி இருப்பதால்

# ரஞ்சனின் அரபு விஜயம் பற்றிய முழுத் தகவல்களும் வேண்டும்

## நாடாளுமன்றத்தில் சிறிமா

கொழும்பு. ஆக. 9 அரபு நாடுகளிடம்இருந்து ஆயுத உதவி பெறுவதற்காக அரசு திட்டமிட்டு நடத்தியதுதான் காத்தான் குடிப் படுகொலைகள் என்று விடுதலைப்புலிகள் குற்றம் சுமத்தி இருக்கிறார்கள். ஆகவே பாதுகாப்பு துணைஅமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா ஆயுதக்கொள்வனவு தொடர்பாக அண்மையில் அரபு நாடுகளுக்குச் சென்றதுபற்றிய முழுவிபரங்களையும் அரசு வெளியிட வேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்,

கிழக்கு நிலைமை பற்றிய விவாதத்தின்போது இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது. (இ-எ)

கொழும்பில் இன்னும் தங்கி உள்ளோரை

## கப்பலில் இலவசமாக அனுப்ப இந்து மாமன்றம் முயற்சி

வடபகுதி செல்ல முடியாது கொழும்பில் நிர்க்கதியாக உள்ளவர்களை கப்பலில் இலவசமாகச் சொந்த இடங்களுக்கு அனுப்ப இந்து மாமன்றம் ஒழுங்குகள் செய்து வருவதாக கூறப்படுகிறது.

கப்பலில் வடபகுதி செல்ல விரும்புபவர்கள் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் உள்ள இந்து மா மன்ற அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளும் படியும் கோரப்பட்டுள்ளனர். (இ-எ)

## ஹெலி - பொம்மர்களினால் சாவகச்சேரி பகுதியில் பீதி

சாவகச்சேரி, ஆக,9 ஞாயிறு அதிகாலை சாவகச்சேரியில் வட்டமிட்ட ஹெலி ஒன்று நகரமத்தியில் நவீன சந்தை முன் கண்டி வீதியில் குண்டு ஒன்றை வீசியது.

இதனை அடுத்து நுணாவில் வீதியில் சென்ற வாகனங்களை நோக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன.

பின்பு காலை 9 மணியளவில் மூன்று பொம்மர்க்ளும் இருஹெலிகளும் பறந்தன. ஒருபொம்மரும் ஹெலியும் சாவகச்சேரிப் பகுதியை வட்டமிட ஹெலி வேட்டுக்களைத் தீர்த்தது.

கெருடாவில், வேம்பிராய்ப் பக்கங்களில் வேட்டுக்கள் சில வீட்டுக் கூரைகளைப் பதம் பார்த்தன. (இ-31)

### உயிர் தப்பினர்

ஞாயிறு காலை பொம்மர் தாக்குதலின்போது கொழும்புத்துறை சைவ வித்தியாலயத்தில் இருந்த அகதிகள் பதுங்கு குழிக்குள் தஞ்சமடைந்ததால் மயிரிழையில் உயிர் தப்பினர். கட்டடங்கள் சேதமடைந்தன.

இந்த முகாமில் இருந்தவர்கள் தற்சமயம் கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையத்தில் தங்கியுள்ளனர். (இ-3)

## ஈரோஸ் எம்.பிக்களின் ராஜினாமா குறித்து ம.ம. முன்னணி

ஈரோஸ் எம். பிக்களின் ராஜினாமா அவர்கள் தாங்கள் தேர்ந்தெடுத்த வழியில் நம்பிக்கை இழந்துவிட்டனர் என்பதையே காட்டுகிறது. இது பாரதூரமான விளைவுகளுக்கே இட்டுச்செல்லும்.

ஈரோஸ் எம். பிக்களின் பதவி விலகல் தொடர்பாக மலையக மக்கள் முன்னணித் தலைவர் திரு. பெ. சந்திரசேகரன் விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;

ஆயுதப்போராட்டம் நடத்திய தமிழ்ப்போராளி அமைப்புக்கள் அரசின் அணுகுமுறையினாலும் ஜனநாயக என்றயில் செயற்படமுடியும் முறை நம்பிக்கையினாலும் ஆயுதங்களைக் கைவிட்டு ஜனநாயக நீரோட்டத்துக்கு வந்தனர்.

இவர்களது இராஜினாமாவை நல்ல அறிகுறியாகக் கருதமுடியாது.

ஜனநாயக வழியில் நம்பிக்கை ஏற்பட வேண்டிய இந்த நேரத்தில் இவர்களை நம்பிக்கை இழக்கவைப்பது பாரதூரமான விளைவுகளுக்கே இட்டுச்செல்லும்.

இப்படி திரு. சந்திரசேகரன் தனது அறிக்கையில் தெரிவித்து உள்ளார். (இ-எ)

### ஆலயத்தில் திருட்டு

உடுவில் ஸ்ரீ சிவஞானப் பிள்ளையார் ஆலயத்தில் கடந்த திங்கட்கிழமை இரவு கதவு உடைக்கப்பட்டு திருடப்பட்டுள்ளது.

திருடர்கள் கோவிலில் உள்ள அம்பாள் விக்கிரகம், வைரவர், சூரியன், வெள்ளி ஆகியவிக்கிரகங்களைப் புரட்டி யந்திரத் தகட்டை களவாட மேற்கொண்ட முயற்சி பலிக்கவில்லை.

அம்பாள், சுப்ரமண்யர் ஆகிய விக்கிரகங்களின் கழுத்தில் இருந்து மூன்று தங்கப் பொட்டுக்களை அவர்கள் திருடிச் சென்றனர். (இ-90)

### நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

## நாடி வந்து அருள்வாயே

பொம்மர் போடுங் குண்டுகளால்
பொலுபொ லென்று வீடுகளும்
அம்மா! பெரிய கடைகளுமே
அதிர்ந்து தரையில் வீழ்வதனால்
சும்மாய் மக்கள் அகதிகளாய்ச்
சூழும் ஊர்களுக் கோடுகிறார்
நம்பா! நல்லைக் குமரேசா!!
நாடி வந்து அருள்வாயே.

கவியரசு வெண்பாமணி முருகசூரியன்

(இன்று நல்லூர்க் கந்தசுவாமி ஆலய 14 ஆம் திருவிழா)

### சாவகச்சேரியில் வெடிக்காத குண்டு

பச்சிலைப்பள்ளி, ஆக.9 கடந்த திங்களன்று இரவு 930 மணியளவில் குண்டு வீச்சு விமானத்திலிருந்து வீசப்பட்ட குண்டு சாவகச்சேரி உதவிஅரசாங்க அதிபர் பணிமனைக்கு அருகில் விழுந்தது.

ஆனால் குண்டு வெடிக்கவில்லை.

இந்தக் குண்டை பெரும் எண்ணிக்கையான மக்கள் பார்வையிட்டனர் (ஒ-117)

### கிழக்குப்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

செல்லப்பட்டனர்.

இதற்கிடையில் அம்பாறை மாவட்டத்தில் தமிழ்க் கிராமம் ஒன்றில் 40 அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதாக நேற்று வெளியான செய்திகள் உண்மையானவை எனஇலங்கை இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். [உ-எ-9]

### யாழ்ரயில்..

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

ஒன்றில் விழுந்த குண்டினால் மரக்காலையில்இருந்தோரும், வீதியில் சென்றோரும் உயிரிழந்தனர்.

பிரதான வீதியிலும், பலாலிவீதி ஆரியகுளத்தடியிலும் குண்டுகள் வீசப்பட்டன. இதனால் அப்பகுதியில் பல வீடுகள் சேதமுற்றன. [உ-3-5]

### அகால..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலைய வீதி- மாட்டின் வீதிச் சந்தியில்சீனச் 'சகடை'விமானம் நடத்தியகுண்டுத் தாக்குதல்களில் இறந்த எண்மரில் திரு.தயாளனும்ஒருவராவார்.

மட்டக்களப்பைச் சேர்ந்த 25 வயது இளைஞரான இவர் கடந்த நான்கு வருடங்களாக உதயன் நிறுவனத்தில் பணியாற்றி வந்தார். விநியோகப்பகுதியில் ஆரம்பத்தில் கடமையாற்றத் தொடங்கிய அவர், தமது முயற்சியாலும், உழைப்பாலும் முன்னுக்கு வந்தவர்.

துடிதுடிப்பும், கடமையை ஆர்வத்துடனும், ஆசையுடனும் செய்யும் அவரது சுபாவமும் கொடுக்கும் பணியை ஏற்றுப் புன்முறுவலுடன் ஆற்றும் பண்பும் அவரது குணாம்சங்களாக இருந்தன. எவருக்கும் உதவத் தயாராக இருந்த அவரது சுபாவம் அவரை ஊழியர்கள் மத்தியில் நல்ல நண்பனாக்கியது. எல்லோருக்கும் நல்லவராகவும், கடமையில் கருத்துள்ளவராகவும் விளங்கிய தயாளனின் மறைவால் துயருறும் அவரது அன்னைக்கும் குடும்பத்தினருக்கும் உதயன் நிறுவனத்தின் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவரது ஆத்மா சாந்தியடைவதாக.

## இராணுவ பயிற்சி பெற்ற பொலீஸ் அணி கிழக்கே!

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு இராணுவப் பயிற்சி பெற்ற ''பிளாட்டூன்'' பொலீஸ் அணியின்ஒரு பிரிவு அனுப்பிவைக்கப்படவுள்ளது.

இவர்கள் நேற்று கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நோக்கிப் புறப்படுவதாக இருந்தது.

இந்த அணியைச் சேர்ந்த 150 பேரில் ஒரு பகுதியினர் காத்தான்குடி பொலீஸ்நிலையத்திலும் பணிபுரிவர் எனத் தெரிவிக்கப்பட்டது. [ஒ-எ]

## மினிபஸ் சொந்தக்காரர்கள் துஷ்பிரயோகம் எனப் புகார்

யாழ்ப்பாணம். ஆக. 9 மினிபஸ் சொந்தக்காரர்கள் சிலர் சேவையில் ஈடுபடுவதற்கு தமக்கு அளிக்கப்பட்ட சந்தர்ப்பத்தை துஷ்பிரயோகம் செய்வதாகக் கூறப்படுகிறது.

அதிகளவு பிரயாணிகளை ஏற்றுதல், அதிக கட்டணம் அறவிடுதல், பிரயாணிகளை குறிக்கப்பட்ட இடத்தில் விடாமல் இடையில் இறக்கி விடுதல் ஆகிய நியாயமற்ற செயல்களில் ஈடுபடுவதாகப் பிரயாணிகள் தெரிவிக்கின்றனர்.

### இன்று கூட்டம்

இதைத் தொடர்ந்து குடாநாட்டிற்கு வெளியே சேவையில் ஈடுபடும் பஸ் உரிமையாளர்களுக்கான கூட்டம் இன்று காலை பத்துமணிக்கு முத்திரைச் சந்தியில் நடகக உள்ளது. இதில் சகலரும் கலந்துகொள்ளவேண்டும் எனப் போக்குவரத்துத் தொடர்பகப் பொறுப்பாளர் கேட்டுள்ளார். [அ]

## கப்பல் உணவுப் பொருள்கள் பளைப் பகுதிக்கும் வேண்டும்

பச்சிலைப்பள்ளி, ஆக. 9 யாழ். குடாநாட்டுக்கென வாகன அணி மூலமும், கப்பல்களிலும் கொண்டு வரப்பட்ட உணவுப் பொருள்கள் பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு வழங்கப்படாதது குறித்து அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

பளைப் பகுதி கிளிநொச்சி மாவட்டத்திற்குள் அமைந்த போதிலும், யாழ். குடாநாட்டிற்குள் இருப்பதால் இப்பகுதிக்கும் உணவுப் பொருள்கள் வழங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (ஒ-117)

### டிராக்டரை நோக்கி தாக்குதல்

திருநெல்வேலி, ஆக 9 யாழ். பல்கலைக்கழகத்துக்குச் சமீபமாக - பலாலி வீதியில் சென்று கொண்டிருந்த ''டிராக்டர்'' ஒன்றின் மீது விமானம் குண்டு வீச்சு நடத்தியது.

குண்டுத் தாக்குதலில் இருந்து ''டிராக்டர்'' விலகிச் சென்று விட்டது. ஆனால் அப்பகுதியிலுள்ள சில வீடுகள் சிறு சேதங்களுக்கு உள்ளாகின. (ஒ - 143)

### பொறுமையாக நடக்க வேண்டுகோள்

கொழும்பு, ஆக. 9 கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்று வரும் துரதிஷ்டவசமான சம்பவங்கள் குறித்து முஸ்லிம்மக்கள்ஆத்திர படாது பொறுமையாக நடந்து கொள்ளவேண்டும்.

இப்படி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் எம். எச். எம். அஷ்ரப் தெரிவித்தார். [இ- எ]

## மத்தியஸ்தம் செய்வதற்கு தொண்டமான் தயாராம்

கொழும்பு, ஆக. 9 தனிநாடு தவிர்ந்த வேறு கோரிக்கைகளை சகல தமிழ்க் குழுக்களும் முன்வைக்கும் பட்சத்தில் அவை குறித்து மத்தியஸ்தம் செய்ய இ.தொ.கா. தலைவரும் அமைச்சருமான திரு. தொண்டமான் தயாராக இருக்கிறார்.

இத்தகவலை இ. தொ. கா. பொதுச்செயலாளரும் துணை அமைச்சருமான திரு. எம். எஸ். செல்லச்சாமி வெளியிட்டார். (இ-எ)

### சுன்னாகம் மின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புகைமண்டலத்துடன் எரிந்து கொண்டிருந்த போது மாலை 4 மணியளவில் ஹெலிக் கொப்டர் ஒன்றும் இரண்டு பொம்மர்களும் மீண்டும் மின் நிலையத்தின் மீது குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

இதனால் மற்றைய இரண்டு தாங்கிகளும் தீப்பிடித்தன.

மூன்று தாங்கிகளும் நேற்று நள்ளிரவு வரை பெரும் புகையைக் கக்கிக் கொண்டு எரிந்த வண்ணம் இருந்தன.

மாலை 5 மணியளவில் வந்த பொம்மர்கள் மூன்றாவது தடவையாக நடத்திய தாக்குதலினால் மின் நிலையத்துக்கு அருகில் இருந்த மின்சாரசபை அலுவலகம், ஊழியர் விடுதிகள், ஜெனரேட்டர்கள், டிரான்ஸ்போமர்கள் ஆகியனவும் தீப்பிடித்தன.

இதனால் சுன்னாகம் மின் நிலையம் முற்றாக நாசமாகியது.

எரிந்து கொண்டிருக்கும் டீஸல் தாங்கிகளில் ஒன்று பத்தாயிரம் கலன் ஹெவி டீஸலையும் மற்றைய இரண்டும் தலா ஐயாயிரம் கலன் ஹெவி டீஸலையும் கொள்ளக் கூடியவையாகும்.

இந்தத் தாங்கிகளின் மீது, பொம்மர்களின் றொக்கட் குண்டுகள் மோதி வெடித்த போது, தாங்கிகளில் இருந்து ஹெவி டீஸல் தீப்பிடித்து எரிந்தவாறு, தாரையாகப் பீறிட்டுப் பாய்ந்தது.

பீறிட்டுப் பாய்ந்த டீஸல் அருகில் இருந்த இடங்களில் தெறித்ததால் அங்கிருந்த வீடுகளும், கட்டடங்களும் தீப்பிடித்தன.

வெளியேறிய டீஸல் எரிந்தபடி அப்பகுதிகளில் பரவி வருவதால் நிலமார்க்கமாகவும் தீ பரவும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

தீப் பிடித்திருக்கும் தாங்கிகள் இரண்டொரு நாட்களுக்குத் தொடர்ந்து எரியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

எரியும் தாங்கியை அணைப்பதற்காகச் சென்ற தீ அணைப்பு வாகனம் ஒன்றை நோக்கியும் பொம்மர் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-3-5-9]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகரில் காயமுற்றோர்

யாழ்ப்பாணம், ஆக. 9

யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி அகதி முகாமிலும், யாழ். ரயில் நிலையச் சந்தியிலும் விழுந்த விமானக் குண்டுகளினால் காயமுற்றோர் விவரம் வருமாறு:-

பெ. சுகிர்தசீலன் (வயது 24), அ. ஜுட்ஸன் (வயது 17), சி. அல்போன்ஸ் (வயது 40), அ. தயாளினி (வயது18), அ. அருள்மதி (வயது 16), அ. சுரேந்திரன் [வயது 12], வி. விஜயகுமார் (வயது 21), அ. அமலதாஸ் (வயது 28), மா. தியாகராசா (வயது 93), தி. இம்மானுவல் (வயது 21), மா. சுப்பிரமணியம் (வயது 59), ப. பாஸ்கரன்(வயது36), அ. றொபின்சன் (வயது 18), இ. ரஞ்சன் (வயது 24), எஸ். பாக்கியநாதன் (வயது 45), கா. ஜெகன் (வயது 13), சி. சாந்தி (வயது 21), கி. உதயன் (வயது 19), பெ. ராணி (வயது 21), பெ. மங்களம் (வயது 60), பாலன் சூரி (வயது 18), தெ. புஸ்பராணி (வயது 3?). (உ-3-51)

# ஒய்வூதிய வவுச்சர்கள்

யாழ்ப்பாணம், ஆக. 9

யாழ்- மாநகரசபை பகுதி உட்பட பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஒய்வூதியம் பெறுபவர்களின் வவுச்சர்கள் தபாலில் அனுப்பப்பட்டுள்ளன. இடம் பெயர்ந்தவர்கள் வழமையாக கடிதம் பெறும் தபாலகங்களுடன் தொடர்பு கொண்டு வவுச்சர்களைப் பெறலாம்.

யாழ்- செயலக ஒய்வூதியக் கிளை அதிகாரி மேகற்ண்டவாறு தெரிவித்தார்.

வழமை நிலையுள்ள பகுதிகளைச் சேர்ந்தவர்களின் வவுச்சர்கள் அவர்கள் ஒய்வூதியம் பெறும் வங்கிகளில் வைத்து வழங்கப்படும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார். (ஒ-3-5)

# மரண அறிவித்தல்கள்

## திரு. வி. செ. குட்டிபிள்ளை

முன்னாள் யாழ்ப்பாண வெளியாத்து உத்தியோகத்தரும் (Writ Officer), ஏல விற்பனையாளரும், இல. 643, கே. கே. எஸ். வீதியில் வசித்தவருமான திரு. வி. செ. குட்டிபிள்ளை அவர்கள் 08-08-1990 அன்று சிவபதமடைந்தார்.

இவர் கமலாதேவியின் அன்புக் கணவரும், தவமணிதேவி, ராஜகோபால், அசோகராசா ஆகியோரின் தந்தையும், மகாதேவன், செல்வராணி, ரஞ்சினி ஆகியோரின் மாமனாரும், தயாளினி, ரதினி, ரகுராம் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09-08-1990 இன்று நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள்

இல. 643, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். [13638]

## சிவகுரு கந்தசாமி

காரைநகர் கோவளம் பகுதியை பிறப்பிடமாகக் கொண்டவரும் அத்தியடி அம்பலவாணர் வீதியில் வசிப்பவரும், சுன்னாகம் அம்பாள் மில் பங்குதாரரும் ஆகிய சிவகுரு கந்தசாமி விமானக் குண்டுத் தாக்குதலினால் 07-08-90 அன்று அகால மரணமடைந்தார். இவர் வளர்மதியின் அன்புக் கணவரும், கிருபாலினி, வசீகரன், யசோ ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். நண்பர்களும், உறவினர்களும் இத் தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஆ. வயித்திலிங்கம்

156, பருத்தித்துறை வீதி,
நல்லூர். [14001]

## எட்வேட் பிரசன்னா

யாழ்ப்பாணம் மின்சாரநிலையவீதி, இரண்டாம் ஒழுங்கையைச் சேர்ந்த எட்வேட் பிரசன்னா நேற்று அகாலமரணமாகிவிட்டார். அன்னார் யாழ்ப்பாணம் எஸ்.கே. பிரிண்டர்ஸ் உரிமையாளர் கி. ஜே. அருமைநாயகம், நதினி தயாளலோஜினி [ ஆரம்ப நீதிமன்றம் வேலணை] ஆகியோரின் சிரேஷ்ட புதல்வரும். கிரிஸ்டி பிரசாந், மேரி பிறிந்த ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற ஜே. ஈ. சவுந்தரராஜா, திருமதி பரிமளம் சவுந்தரராஜா, காலஞ்சென்ற எஸ். கிறிஸ்தோத்திரம், திருமதி விக்ரோறியா கிறிஸ்தோத்திரம் ஆகியோரின் பேரனும் ஆவார்.

நல்லடக்க ஆராதனை இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கோப்பாய் கிளுவானை லேனில் உள்ள டானியல் அவர்களின் இல்லத்தில் நடைபெற்று கோப்பாய் கிறிஸ்தவ சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
கி. ஜே. அருமைநாயகம்.
(ஜெரோம்) [5159]

# மானிப்பாய் வைத்தியசாலையை மீண்டும் இயங்க வைக்க முயற்சி

## செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் பேச்சுவார்த்தை

யாழ்ப்பாணம், ஆக. 9

மானிப்பாயில் இயங்கி வந்த யாழ். போகுனா வைத்தியசாலையை மீள இயங்கச் செய்ய யாழ்- செஞ்சிலுவைச் சங்கம் முயற்சி மேற்கொண்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற குண்டுத் தாக்குதலை அடுத்து உடனடியாக இந்த வைத்தியசாலை மூடப்பட்டது.

மீண்டும் வைத்தியசாலையை இயங்கச் செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு யாழ்- செஞ்சிலுவைச் சங்கம் செஞ்சிலுவைச் சங்க சர்வ தேசக்குழு மூலமாக கோரிக்கை விடுத்துள்ளது.

செஞ்சிலுவைச் சங்க சர்வ தேசக்குழு அதிகாரிகள் கொழும்பிலுள்ள பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன் நேற்றுப் பேச்சு நடத்தினர்;

யாழ்-மாவட்டத்தில் உள்ள சகல வைத்தியசாலைப் பகுதிகளையும் அமைதிப் பிரதேசமாக்குமாறும், ஊழியர்கள், வைத்தியர்கள், நோயாளர்கள் ஆகியோரின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்குமாறும்செஞ்சிலுவைச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (ஒ-3-5)

## பெனாஸிர் வெளியேற தடை

இஸ்லாமபாத், ஆக. 9

முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோ பாகிஸ்தானை விட்டு வெளியேறத் தடை விதிக்கப்பட்டது.

நாட்டைவிட்டு வெளியேறத் தடை விதிக்கப்பட்டுள்ள 32 அரசியல்வாதிகளில் பெனாஸிரும் அவரது கணவரும் அடங்குகின்றனர் என்று பாகிஸ்தான் 'டைம்ஸ்' நாளிதழ் நேற்றுச் செய்தி வெளியிட்டது. (ஒ-எ)

# மாநகரசபை கட்டடம் மீது இரண்டாவது தடவையும் தாக்கு

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 9

நல்லூரிலுள்ள யாழ் மாநகர சபை அலுவலகம் மீது நேற்று முன்தினம் இரண்டாவது தடவையாக மாலை 6. 15 மணியளவிலும் விமானக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

யாழ். மாநகர சபையின் தீயணைக்கும் படைப் பிரிவு வாகன தரிப்பிடத்தை நோக்கியே தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. தீயணைக்கும் வாகனம் தாக்குதலில் இருந்து தப்பிவிட்டது.

ஆணையாளர் அலுவலகமும், அலுவலக வளவில் நிறுத்தப்பட்டிருந்த புல்டோசர்கள் மற்றும் உழவு யந்திரங்கள் போன்றவையும் சேதமடைந்தன.

இந்தத் தாக்குதலுக்கு சுமார் ஒன்றரை மணித்தியாலத்துக்கு முன்னமும் இப்பகுதியில் குண்டு வீச்சு நடத்தப்பட்டது தெரிந்ததே.

இச் சம்பவங்களை அடுத்து ஊழியர்களின் பாதுகாப்புக் கருதி யாழ் மாநகரசபை அலுவலகம் ஒரு வாரத்திற்கு மூடப்பட்டிருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-5-3)

## ஷெல் வீச்சில் மூவர் காயம்

கிளிநொச்சி, ஆக.9

ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து நேற்று மாலை 4 மணி அளவில்இயக்கச்சி சந்தியை நோக்கி ஷெல் தாக்குதல் மேற் கொள்ளப்பட்டது அதில் மூவர்காயமடைந்தனர். [ஒ-76]

# தமிழகம் வரும் ஈழ அகதிகளை இந்தியா திருப்பி அனுப்பாது

## ராஜ்ய சபையில் அமைச்சர் குஜ்ரால் உறுதி

தமிழ்நாடு வந்து சேரும் இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கைக்கு இந்தியா திருப்பி அனுப்பாது.

வெளியுறவு அமைச்சர் இந்தர்குமார் குஜ்ரால் நேற்று ராஜ்யசபையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் சொன்னதாவது;

மேலும் இலங்கையில் இருந்து தமிழ் அகதிகள் தமிழகம் வருவதைத் தடுக்கவே இலங்கையிலேயே அகதி முகாம் ஒன்றை அமைக்கும் யோசனையை இந்தியா வெளியிட்டது.

இந்த யோசனையை அமுல் நடத்துவது குறித்து ஐ. நா. சபை மற்றும் சர்வதேச அமைப்புக்களுடன் இந்திய அரசு தொடர்பு கொண்டுள்ளது என்றும் அமைச்சர் குஜ்ரால் சொன்னார்.

உள்துறை இணை அமைச்சர் சுபுகோன் சஹாய் ஒரு கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் —

தமிழகம் வந்துள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை நிரந்தரமாகத் தங்குவதற்குரிய புனர்வாழ்வுத் திட்டங்களை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

இலங்கை நிலைமை சீரானதும் அவர்கள் தாயகம் திரும்பி விடுவர் என்று தெரிவித்தார். (ஒ-எ)

## சிவன் கோவில் மண்டபம் சேதம்

நேற்று அதிகாலை திருநெல்வேலிப் பகுதியில் பறந்த ஹெலி அப்பகுதியில் ஷெல் தாக்குதல் நடத்தியது.

ஷெல் தாக்குதலில் சிவன் கோவில் அன்னதான மண்டபம் சேதமடைந்தது. வேறு பாதிப்பு ஏதும் ஏற்படவில்லை. [ஒ-143]

## கொள்ளை!

செட்டிகுளம் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் சிலகடந்த செவ்வாய்க்கிழமை இராணுவத்தினரால் உடைக்கப்பட்டு கொள்ளையிடப் பட்டதாகத் தெரிவிக்கப் படுகிறது.

[illegible] அலுவலகமும் தீயிட்டு கொழுத்தப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது (ஒ-76)

# இன்று மௌன ஊர்வலம்

யாழ்ப்பாணம். ஆக. 9

தமிழ் மக்கள் மீதான தாக்குதல்களை உடன் நிறுத்தும்படி கோரி கொழும்புத் துறையில் இருந்து இன்று காலை மௌன ஊர்வலம் ஒன்று நடைபெற உள்ளது.

ஊர்வலம் செயலகத்தை வந்தடைந்ததும், அங்கு உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட இருக்கிறது.

யாழ். அரச அதிபரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கான ஏற்பாடுகளை தமிழ் மாநில அகதிகள் பாதுகாப்பு மன்றம் செய்துள்ளது.

அதே வேளை தமிழ் மக்கள் படும் இன்னல்கள் குறித்து ஐந்து லட்சம் பேரின் கையொப்பங்களுடன் மகஜர் ஒன்றை ஐ. நா. சபைக்கு அனுப்பவும் இந்த மன்றம் முயற்சி மேற் கொண்டுள்ளது. (ஒ-30)

# மண்ணெண்ணெய் மட்டுமே அனுப்ப நடவடிக்கையாம்

யாழ்ப்பாணம், ஆக. 9

அரசாங்கம் யாழ்-மாவட்டத்துக்கு மண்ணெண்ணெய் மட்டும் அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரியவருகிறது.

பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் போன்றவற்றை உடன் அனுப்பி வைக்குமாறுயாழ்.அரசஅதிபர்திரு. அன்ரன் அல்பிறட், அத்தியாவசிய சேவைகள் நாயகம் திரு. சரித்தரத்வத்தையிடம் அடிக்கடி கோரிக்கை விடுத்து வருகிறார்.

ஆனால் எரிபொருள் அனுப்ப எந்தவித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை.

எனினும் அடுத்த வாரமளவில் [illegible] டும் அனுப்ப அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-3)

## தென்மராட்சியில் துக்கம் அனுஷ்டிப்பு

பச்சிலைப்பள்ளி, ஆக. 9

கோட்டை மீது நடத்தப்பட்ட தாக்குதலின்போது மரணித்த 27 போராளிகளுக்கு அஞ்சலி தெரிவிக்கும் வகையில் செவ்வாய்க்கிழமை பச்சிலைப்பள்ளி, தென்மராட்சிப் பகுதியிலுள்ள சகல வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டு துக்கம் அனுஷ்டிக்கப் பட்டது. [ஒ-117]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 09-08-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org